**பாணந்துறை பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 05 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 14 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தைத் தவிர, கணக்காய்வுக்காக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாணந்துறை பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல் கூற்றையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவினப் பதிவேடு மற்றும் கடன்கொடுத்தோரின் படி, மீளாய்வாண்டின் தெரு ஒளியூட்டும் கருவிகளின் கொள்வனவுகள் மற்றும் காகிதாதிகள் மற்றும் காரியாலய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டமை முறையே ரூபா 3,717,814 தொகையும் ரூபா 1,502,881 தொகையுமான போதிலும், ஆண்டிற்கான கொள்வனவாக முறையே ரூபா 3,628,229 தொகையும் ரூபா 2,135,677 தொகையும் களஞ்சிய இருப்புக் கணக்குகளுக்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் ரூபா 65,350 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 03 சொத்து விடயங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கையில் மீள பல்வேறு வகைப்பட்ட பொருள் இருப்புக்கள் கொள்வனவுகளாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டிற்கு உரித்தாக கைத்தொழில் செயற்திட்டத்திற்காக செலுத்தப்பட வேண்டிய மீதி ரூபா 70,483,379 தொகையான போதிலும் ரூபா 65,732,928 மாத்திரம் தேறியிருந்தது.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 167,182,420 கூட்டுத்தொகையான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 37,292,601 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 46,445,192 ஆக இருந்தது.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காலஞ்சென்ற, ஓய்வு பெற்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற 16 ஊழியர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 189,448 ஆகக் காணப்பட்டது.

(ஆ) பல வருட காலமாக அறவிடப்படாது முன்கொண்டு வரப்பட்டிருந்த தெரு விளக்கு மானிய மீதி ரூபா 7,437,096 தொகையும் முற்கொடுப்பனவுத் தொகையான ரூபா 1,717,893 தொகையும் காணப்பட்டன.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

செயலாளரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 24,239 | 13,850 | 20,571 |
| (ii) | வாடகை | 4,265 | 3,234 | 4,127 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 196 | 176 | 32 |
| (iv) | ஏனைய வருமானம் | 22,439 | 22,439 | -- |

**2.3.2 வீத வரி**

2014 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட வீத வரி மீதி ரூபா 19,596,648 ஆகக் காணப்பட்டது. குணக்காய்வுத் தினமாகிய 2015 யூலை 30 ஆம் திகதி வரையில் இதில் ரூபா 4,273,569 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. நிலுவை மீதியில் ரூபா 10,000 ஐப் பார்க்கிலும் அதிகமான நிலுவை மீதியுடனான 53 ஆதனங்கள் காணப்பட்டதுடன் கூட்டுமொத்தப் பெறுமதி ரூபா 1,124,641 ஆகக் காணப்பட்டது.

சபைக்குரித்தான 3 உப அலுவலகங்களின் 42465 ஆதனங்களிலிருந்து ரூபா 25,436,320 தொகையான வீத வரி மீதி நிலுவையாகக் காணப்பட்டதுடன் கணக்காய்வுத் தினமாகிய 2014 சனவரி 28 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேற்குறித்த நிலுவை மீதியில் ரூபா 9,180,754 தொகை வாழைத் தோட்ட உப அலுவலகத்தின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.3.3 வியாபார வரி**

2014 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவையான வியாபார வரி மீதி ரூபா 723,831 தொகையானதுடன் கணக்காய்வுத் தினமாகிய 2015 யூன் 30 ஆம் திகதி வரையில் இதில் ரூபா 104,260 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. வாத்துவ உப அலுவலக வியாபார வரிப் பதிவேட்டின் படி, 1 முதல் 4 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கான வியாபார வரியைச் செலுத்தியிராத 215 வியாபாரிகள் காணப்பட்டனர்.

**2.3.4 கைத்தொழில் வரி**

2014 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவையான கைத்தொழில் வரி ரூபா 224,210 தொகையானதுடன் 2015 யூன் 30 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 16,750 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. வாத்துவ உப காரியாலயத்தில் கைத்தொழில் வரிப் பதிவேட்டின் படி 1 வருடம் முதல் 4 வருடங்கள் வரையான காலமாக கைத்தொழில் வரி செலுத்தியிராத 78 கைத்தொழில் உரிமையாளர்கள் காணப்பட்டனர்.

**2.3.5 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்**

மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணங்களில் ரூபா 11,550 தொகை கணக்காய்வுத் தினமாகிய 2015 யூன் 30 ஆம் திகதி வரையிலும் நிலுவையாகக் காணப்பட்டன.

**2.3.6 கட்டிட வாடகை**

வாழைத்தோட்ட உப அலுவலகத்திற்குரித்தான பகுதியில் இயங்கும் பொலிஸ் நிலையத்தில் இருந்து 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 4,127,084 தொகையான வாடகை கணக்காய்வுத் தினமாகிய 2015 யூன் 30 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. வாழைத்தோட்ட உப அலுவலகத்தினால் வழங்கப்பட்டிருந்த வருமான அறிக்கையின் படி மேற்குறித்த நிலுவை மீதி ரூபா 4,178,482 ஆகக் காணப்பட்டது.

**2.3.7 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 5,111,528 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 50,000,000 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 132 ஆம் பிரிவின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிராத போது 2012 மார்ச் 06 ஆம் திகதிய தலைவரின் அங்கீகாரத்தை அடிப்படையாகக் கொண்டு சபையின் தலைவர், உப தலைவர் மற்றும் அமைச்சர்களின் வீடுகளுக்காக பத்திரிகை விநியோகிக்கப்படுவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 141,485 தொகையும், 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 155,135 தொகையும், 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 57,020 தொகையும், சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

**(அ) ஒரே காலப்பகுதியின் போது ஒரே சங்கத்தரிடம் இருந்து நிர்மாணிப்பு ஒப்பந்தங்கள் சில மேற்கொள்ளப்பட்டமை**

2012 சனவரி 05 ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இல. 1/.2012 இன் படி, மக்கள் அடிப்படையாகக் கொண்ட அமைப்பிற்காக நேரடி ஒப்பந்தம் ஒப்படைக்கப்படுகையில், உரிய மக்கள் சார் அமைப்பு 3 ஒப்பந்தங்களைக் காட்டிலும் கூடுதலான அளவிற்கு ஈடுபடலாகாத போதிலும் இதற்கு மாறாக 2014 பெப்ரவரி மாதத்தில் இருந்து ஒரே காலப்பகுதிக்காக ஒரே சங்கத்தினால் 06 ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**(ஆ) வேரகம அல்விஸ் மாவத்தை வள கேந்திர திண்ம கழிவு முகாமைத்துவம்**

மத்தியநிலையமாக மீளமைத்தல்

வேரகம அல்விஸ் மாவத்தையில் உள்ள சபைக் காணியில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த வளக் கேந்திரத்தில் ரூபா 496,223 தொகை சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டு திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையம் ஒன்றாக மீளமைக்கப்பட்டிருந்தது. 2015 மே 22 ஆம் திகதிய சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மதிப்பீட்டின் வேலை விடயம் இல. 2 இன் படி, ½'' விட்டத்தைக் கொண்ட மென் உருக்குக் கம்பி ஒன்று ஒட்டப்பட்டு கம்பி வலை பொருத்தப்படக் கூடிய வகையில் பூர்த்தி செய்யப்படுவதற்கும் இரு முறை துரப்பிடிப்பு எதிர்ப்புப் பூச்சிடப்படுவதற்காக ரூபா தொகை மதிப்பிடப்பட்டு ரூபா 161,325 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 1/4 '' அளிவலான கம்பியே ஒட்டப்பட்டிருந்ததுடன் அதில் பூச்சிடப்பட்டிராத காரணத்தால் துரப்பிடித்திருந்தது.

(ii) கட்டிடம் அமைந்துள்ள காணி முற்றாக பற்றைகள் உருவாகி இருந்ததுடன் நிர்மாணிப்புகள் எந்தவித பயன்பாடும் இன்றி கைவிடப்பட்டிருந்தன.

(இ) மொல்லேகொட வடக்கு ''சேவா பியச'' வின் மேல் மாடி வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தமை

---

(i) மதிப்பீட்டு வேலை விடயம் இல. 116(6) இன் படி, வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களிற்கு அமைய 3 அடி உயரமான கைபிடிகள் படிகளிற்காக வழங்கப்பட்டு, பொருத்தப்பட்டிருந்த மரப் பகுதிகள் மூலப் பூச்சு இடப்பட்டும் பொலியுரத்தின் உருக்கு பூச்சிடப்பட்டு பூர்த்தியாக்கப்படுவதற்காக ரூபா 61,000 தொகைக்கு மதிப்பிட்டு அத் தொகையே செலுத்தப்பட்டிருந்த போதிலும் மரத்தால் தயாரிக்கப்பட்டிருந்த தொடர்புபடுத்தப்பட்ட கைபிடிகள் 5 மரத் தூண்களிற்கு மரத்தின் மூலப் பூச்சு அல்லது பொலியுரத்தின் வானிஷ் இடப்பட்டிராததுடன் மரத்தால் தயாரிக்கப்பட்ட பகுதிகள் அனைத்தும் வெயிலிலும் மழையிலும் தாக்கத்திற்குள்ளாகியதன் காரணமாக நிறம் குன்றிக் காணப்பட்டன.

(ii) மதிப்பீட்டு வேலை விடய இல. 11 இன் படி, கொங்கிரீட் நிலம் 1:3 சீமேந்து மண் கலவையில் நில மேற்பரப்பு இடப்பட்டு நிற சீமேந்துக் கலவையினால் කොලපු මගින් மெழுகிப் பூர்த்தி செய்வதற்காக ரூபா 45,105 மதிப்பிடப்பட்டு ரூபா 43,856 செலுத்தப்பட்டிருந்த போதிலும் கொங்கிரீட் நிலத்தில் இடப்பட்டிருந்த நிறமூட்டப்பட்ட சீமேந்துக் கலவையின் மூலம் பூர்த்திசெய்யப்பட்டிருந்த வெளிப்பகுதி மெழுகப்பட்டிருக்கவில்லை.

(iii) மதிப்பீட்டு வேலை விடயம் இல. 115(9) இன் படி, ''கினிசப்பு'' அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறத்திலான மரத்தை வழங்கி கூரைப் பலகைகள் பொருத்தப்பட்டு பூர்த்திசெய்யப்படுவதற்காக ரூபா 13,972 தொகை மதிப்பிடப்பட்டு அத் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் கூரைப் பலகைகளிற்காக வெளிப் பகுதியில் பூச்சிடப்பட்டிருக்கவில்லை.

(iv) மேல் மாடியின் நிலப்பகுதி மற்றும் சுவருக்காக ஸ்கர்டின் இடப்படுவதற்கு மதிப்பிடப்பட்டிராத காரணத்தால் பூர்த்தி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கொரகான கல்லறையின் சுவர் மற்றும் பாதுகாப்பு வேலி நிர்மாணிக்கப்படல் (2 ஆம் கட்டம்)

---

(i) மதிப்பீட்டு வேலை விடய இல. 7 இன் படி, 3'' விட்டம் கொண்டதும் 3.6 மி.மி. தடிப்பமான குழாயை வழங்கி பூச்சிடப்பட்டு பொருத்தப்படுவதற்காக ரூபா 200,880 தொகை மதிப்பிடப்பட்டு அத் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், பொருத்தப்பட்டிருந்த ஜீ 1 குழாய்களின் விட்டம் 2 ½'' மாத்திரமேயாகக் காணப்பட்டது.

(ii) மதிப்பீட்டு வேலை விடய இல. 8 இன் படி, 20மி.மி. X 6 மி.மி. அளவிலான தட்டையான இரும்பு பட்டிகள் விநியோகிக்கப்பட்டு 6 மி.மி. விட்டத்திலான 9 துளைகள் இடப்பட்டு வலை குழாய்களுக்கு பொருத்துவதற்காக ரூபா 49,680 தொகை மதிப்பிடப்பட்டு அத் தொகையே செலுத்தப்பட்டிருந்த போதிலும் வலை ஜீ 1 குழாய்களுக்கு ¼'' அளவிலான கம்பியே பொருத்தப்பட்டிருந்தது.

(உ) வேரவத்த ஸ்ரீ விஜய வீதியின் இடப்பக்கத்தில் உள்ள 1 ஆம் துணை வீதி மற்றும் தொடவத்த ஸ்ரீ மான் ராசிக் பரீட் மாவத்தையின் 29 ஆம் இலக்க வீட்டிற்கு அருகாமையில் உள்ள துணை வீதி

---

முறையே ரூபா 287,817 தொகையும் ரூபா 189,750 தொகையும் மதிப்பிடப்பட்டு மேற்குறித்த இரு வீதிகளுக்காக கொங்கிரீட் வடிவமைக்கப்பட்ட கற்கள் இடப்பட்டிருந்ததுடன் 2015 மே 22 ஆம் திகதி சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வுப் பரிசோதனையின் போது வீதியின் இரு மருங்கிலும் குடியிருப்பாளர்களால் வீடுகளின் கழிவு நீர் வீதிக்கு இடப்படுவதற்காக வடிவமைக்கப்பட்ட கற்கள் கழற்றப்பட்டிருந்ததுடன் எவ்வித திட்டமும் இன்றி வீதியைச் சேதப்படுத்தி பீவீசீ டவுண் குழாய்கள் இடப்பட்டிருந்தன. இது தொடர்பாக சபை எவ்வித நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை.

## 3.3 செயற்பாட்டு/ முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

### (அ) திட்டக் குழு படிப்பணக் கொடுப்பனவு

(i) வருகைப் பதிவேடு மற்றும் லீவுப் பதிவேட்டின் படி, சபைச் செயலாளரும் விடயத்திற்குப் பொறுப்பான எழுதுவினைஞரும் உத்தியோகபூர்வ லீவு மற்றும் தனியார் லீவைப் பெற்றுக்கொண்டு 21 நாட்களுக்காக ரூபா 13,650 தொகையான திட்டக்குழுப் படிப்பணத்தைப் பெற்றிருந்தார்.

(ii) 2014 ஆம் ஆண்டின் போது வாழைத் தோட்ட உப அலுவலகத்தில் நடாத்தப்பட்டிருந்த திட்டக் குழு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கைவிரலடையாள இயந்திரப் பதிவுப் பத்திரங்களில் குழு உத்தியோகத்தர்கள் வெளியேறிய நேரத்தின் படி, உத்தியோகபூர்வ நேரத்தின் பின்னர் 2 மணித்தியாலங்கள் குழு நடாத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டதுடன் இதன் படி, 2004 திசெம்பர் 15 ஆம் திகதிய உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் எல்ஜீ/07/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 15 ஆம் பந்திக்கு மாறாக 14

நாட்களுக்காக ரூபா 45,500 தொகையான குழுப் படிப்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) ஜேசீபீ இயந்திரத்தின் செயற்பாடு**

சபைக்கு உரித்தான ஜேசீபீ இயந்திரம் 2014 ஆம் ஆண்டின் போது 1291.2 கிலோ மீற்றர் ஓடுவதற்கு 8842 கிலோ மீற்றர் எரிபொருளுக்காக ரூபா 839,990 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் வாகனத் திருத்தவேலைகளுக்கான செலவினமும் டயர் மற்றும் ரியூப் கொள்வனவிற்காக ஆண்டின் போது ரூபா 399,795 தொகையும் இயந்திர இயக்குனருக்காக மேலதிக 1837.50 மணித்தியாலங்களிற்காக ரூபா 123,993 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. இதன் படி, ஆண்டின் போது ரூபா 1,363,778 தொகை இயந்திரத்தின் செயற்பாட்டிற்காக ஏற்கப்பட்டிருந்த போதிலும் இயந்திரத்தை வாடகைக்கு வழங்கப்படுவதன் மூலம் சபைக்குக் கிடைக்கப்பெற்றிருந்த வருமானத் தொகை ரூபா 874,940 மாத்திரமேயாகக் காணப்பட்டது. இவ்வாறே இயந்திரத்தை சேவையில் ஈடுபடுத்தப்படுவதற்கு உரிய ஓர் பதிவேடும் சபையால் பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) நட்டங்களும் இழப்புகளும்

(i) சபையின் கோரல் இன்றி திவிநெகும திணைக்களத்தின் மூலம் 2014 நவம்பர் மாதத்தில் சபைக்கு வழங்கப்பட்டிருந்த 512 ஜீ 1 குழாய்கள் கணக்காய்வுத் தினமாகிய 2015 ஏப்ரல் 07 ஆம் திகதி வரையில் 106 குழாய்கள் மாத்திரமே காணப்பட்டன. இக் குழாய்களின் பெறுவனவு அல்லது விநியோகம் தொடர்பாக எவ்வித விபரமும் சபையின் இருப்புப் புத்தகத்திலோ அல்லது வேறு எவ்வித பதிவேட்டிலும் பதியப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 ஆம் ஆண்டின் மெய்மையாய்வு அறிக்கைகளின் படி, வெளியே கொண்டு செல்லப்பட்டு மீள ஒப்படைக்கப்பட்டிராத ரூபா 3,697 பெறுமதியான 34 புத்தகங்களின் பெறுமதி அறவிடப்படுவதற்கு சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்